**கேகாலை மாவட்டத்தின் 15 கமநல சேவைக் குழுக்கள் - 2024**

------------------------------------------------------------------------------------------

**1. கணக்காய்வு அபிப்பிராயம்**

1.1 கேகாலை மாவட்டத்தின் 15 கமநல சேவைக் குழுக்களின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) ஆம் பிரிவு என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2** கேகாலை மாவட்டத்தின் 15 கமநல சேவைக் குழுக்களுக்குரியதாக விநியோகிக்கப்பட்ட 15 கணக்காய்வு அறிக்கைகளிலும் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளியிடப்பட்டிருந்ததுடன் அதற்கான காரணங்களாக இருந்த பொருண்மையான குறைபாடுகள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**1.3 நிதிக்கூற்றுக்கள்**

**1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் உட்பட கணக்கீட்டுக் கொள்கைகளுடன் இணங்காமை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 13 குழுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 21 ஆம் பந்தியின் பிரகாரம் உரிமை உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று சமர்ப்பிக்காதிருந்ததுடன் நியம இலக்கம் 07 இன் 25 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்களைக் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | திணைக்களத்தின் ஆலோசனையின்படி நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் கையேற்கப்படாத காணிகளை கையேற்ற பின் சொத்துக்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 06 குழுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 40, 41 மற்றும் 42 ஆம் பந்திகளின் பிரகாரம் கிரய படிவம் அல்லது மீள் மதிப்பீட்டு படிவத்தைப் பயன்படுத்தாமல் வருடாந்த தேறிய பெறுமதியின் அடிப்படையில் பெறுமானத் தேய்வுசெய்து நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருந்து. | திணைக்களத்தில் இருந்து ஆலோசனைகளை விசாரணை செய்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | யட்டியான்தோட்டை கமநல சேவை குழுவினால் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 76 ஆம் பந்தியின் பிரகாரம் நேர்கோட்டு முறையில் பெறுமானத்தேய்வு செய்யப்படுவதாக கணக்குகளில் | திணைக்களத்தில் இருந்து ஆலோசனைகளை விசாரணை செய்து அதன் பிரகாரம் நடவடிக்கை | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள பெறுமானத் தேய்வுக் கொள்கையின் படி பெறுமானத் தேய்வு |

| | | | |
|---|---|---|---|
| | வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் குறைந்து செல்லும் பெறுமதி அடிப்படையில் பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட்டிருந்தது. | எடுக்கப்படும். | செய்தல் வேண்டும். |
| (ஈ) | 14 குழுக்களின் கமநல வங்கிகளுக்குரிய சகல கணக்குகளும் கமநல சேவைக் குழுக்களின் வருடாந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடக்கி ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் ஒன்றிணைந்த கணக்குகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (உ) | 04 குழுக்களுக்குரிய 04 நமநல வங்கிகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 21 ஆம் பந்தியின் பிரகாரம் கமநல வங்கி நிதிக்கூற்றுத் தொகுதியில் தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | 04 குழுக்களுக்குரிய 04 கமநல வங்கிகள் எதிர்காலத்தில் சரிசெய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஆண்டிற்குரிய வருமானம் ரூபா 132,545 அதிகரித்தும், ரூபா 689,652 பிழையாக வருமானம் செலவு வைத்தமை, ரூபா 9,560 கொள்வனவு குறைவாகவும், ரூபா 59,216 செலவினம் குறைத்தும் மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 4,000 வருமானம் கணக்கீடு செய்தல் போன்ற காரணங்களினால் 08 குழுக்களின் மிகைகளின் கூட்டுமொத்தம் ரூபா 894,973 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது கணக்காண்டிற்குரிய வருமானம் மற்றும் செலவினங்களை சரியாக சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஆண்டிற்குரிய ரூபா 875,555 வருமானம் குறைத்தும், ரூபா 37,500 கொள்வனவு அதிகரித்தும், ரூபா 125,082 செலவினம் அதிகரித்தும், முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 57,795 செலவினம் மற்றும் ரூபா 1,102,600 நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்தல் ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்தல் போன்றவற்றின் காரணத்தால் 10 குழுக்களில் மிகைகளின் கூட்டுமொத்தம் ரூபா 2,198,532 குறைத்துக் காண்பிக்கப்பட்டி ருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 09 குழுக்களில் கிடைக்கவேண்டிய ரூபா 239,493 ஆன வருமானம், ரூபா 26,556 வங்கிக் கணக்கு மீதி மற்றும் பொருள் கடன் விநியோகித்தலுக்காக கமநல வங்கியில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 1,108,981 கணக்கீடு செய்யப்படாமை மற்றும் ரூபா 395,058 நிலையான வைப்பு, ரூபா 23,650 இருப்பு குறைவாக கணக்கீடு செய்யப்பட்ட மையால் கூட்டுமொத்தமாக ரூபா 1,793,738 இனால் நடைமுறைச் சொத்துக்கள் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 06 குழுக்களில் ரூபா 17,157,503 நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படாமையால் நடைமுறையல்லாச் சொத்துக்கள் அப் பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்ட துடன் அந்தப் பெறுமதிக்குரிய பெறுமானத் தேய்வு செலவினமும் குறைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்யவேண்டி யிருந்ததுடன் உரிய சீராக்கங்கள் மேற் கொள்ளப்படல் வேண்டும். |
| (உ) | 02 குழுக்களில் ரூபா 2,832,402 நடைமுறைப் பொறுப்புக்கள் அதிகரித்தும், 02 குழுக்களில் ரூபா 5,081 நடைமுறைப் பொறுப்புக்கள் குறைத்தும் மற்றும் ஒரு குழுவில் நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் ரூபா 600,000 தொகை அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொறுப்புக்களை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஊ) | 06 கமநல வங்கிகளில் ரூபா 40,460,800 பெறுமதியான 346 நாட்குறிப்பு பதிவுகளுக்கான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் செய்யப்படும். | சரி நாட்குறிப்புக்களுக்காக அங்கீகாரம் பெற வேண்டியிருந்ததுடன் அவ்வாறு செய்யாத தரப்பினருக்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | 09 கமநல வங்கிகளில் ஆண்டின் ஆரம்பத்தில் ரூபா 376,495,515 ஆன சொத்துக்கள் ரூபா 290,095,525 ஆன பொறுப்புக்கள் மற்றும் ரூபா 86,399,991 ஆன உரிமை மூலதனக் கணக்கு நாட்குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் செய்யப்படும். | சரி நாட்குறிப்புக்களின் மூலம் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | 05 கமநல வங்கிகளின் பரீட்சை மீதியில் உள்ள ரூபா 19,523,916 பெறுமதியான 27 கணக்குகளுக்காக பொதுப் பேரேட்டில் கணக்குகள் பேணிச்செல்லப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்யப்படும். | பேரேட்டுக் கணக்குகளை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.3.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 09 கமநல சேவைக் குழுக்களின் கணக்குகளில் 21 விடயங்களின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதிக்கும் நேரொத்த அறிக்கையின் பிரகாரம் அந்த மீதிக்குமிடையே ரூபா 1,477,970 வேறுபாடு காணப்பட்டது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நேரொத்த பதிவேடுகள் நிதிக் கூற்றுக்களுடன் இணக்கம் செய்து உரிய சீராக்கம் மேற் கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | 08 கமநல வங்களில் 28 கணக்குகளின் பேரேடுகள் மற்றும் பரீட்சை மீதிக்கிடையே ரூபா 5,843,550 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் சரிசெய்யப்படும். | மேற்படி |

### 1.3.4 அதிகார பலம் இன்றிய கொடுக்கல் வாங்கல்கள்

| | அதிகார பலம் இன்றிய கொடுக்கல் வாங்கல் தொடர்பான விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 03 குழுக்களின் வருட ஆரம்பத்தில் ரூபா 51,607,353 சொத்துக்கள் ரூபா 19,318,602 பொறுப்புக்கள் மற்றும் ரூபா 32,288,751 உரிமை மூலதனக் கணக்குகள் பேரேட்டில் குறிப்பிடுதல் நாட்குறிப்புக்கள் மூலம் மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நாட்குறிப்புக்களின் மூலம் பேரேட்டில் பதிதல் வேண்டும். |
| (ஆ) | 03 குழுக்களின் பெறுமதி ரூபா 739,524,607 ஆன 42 நாட்குறிப்பு பதிவுகள் அங்கீகரிக்கப் படாதிருந்ததுடன் நாட்குறிப்புக்கள் ஈடுபடுத்தப்படாமல் ரூபா 141,951 கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அங்கீகாரத்தைப் பெற்று நாட்குறிப்புக் களை ஈடுபடுத்த வேண்டியிருந்ததுடன் அவ்வாறு இல்லாத தரப்பினருக்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.3.5 தொங்கல் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 04 கமநல சேவைக் குழுக்களுக்குரிய தொங்கல் கணக்குகளில் நீண்டகாலம் | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | விரைவான வேலைத் திட்டம் ஒன்றைப் |

| | |
|---|---|
| முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 212,892 வரவு மீதி மற்றும் ரூபா 12,948 செலவு மீதி என்பன தீர்த்து வைத்திருக்கப்பட்டிருக்கவில்லை. | பயன்படுத்தி தொங்கல் கணக்கு மீதிகளை தீர்த்து வைத்தல் வேண்டும். |

### 1.3.6 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 04 குழுக்களில் ரூபா 49,521,550 பெறுமதியான 48 கணக்கு விடயங்களின் சொத்துப் பதிவேடு, மீதி உறுதிப்படுத்தல் மற்றும் காலப் பகுதிப்பாய்வு காணப்படாமை யினால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்துவதற்கோ அல்லது ஏற்றுக்கொள்வதற்கோ முடியாதிருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய கணக்காய்வு சான்றுகள் சமர்ப்பிக் கப்படல் வேண்டும். |
| (ஆ) | 07 கமநல வங்கிகளில் ரூபா 228,480,838 பெறுமதியான 71 பேரேட்டுக் கணக்குகளுக்கான பட்டோலைகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்யப்படும். | மேற்படி |

### 1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) (i) | 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டத்தின் 22 ஆம் பிரிவு | 15 குழுக்களில் விவசாய ரீதியிலான காணிகளில் மிகவும் பொருத்தமான பயிர்ச் செய்கை மற்றும் விலங்கினங்களைத் தீர்மானித்து முறையான வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | திணைக்கள ஆலோசனையின் பிரகாரம் எதிர்வரும் ஆண்டின் போது நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்படும். | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் அவ்வாறு இல்லாத தரப்பினருக்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டத்தின் 53(4) ஆம் பிரிவு | 14 குழுக்களின் காணிப் பதிவேடு மீள் திருத்தம் செய்யப்பட்டிருக்க வில்லை. | திணைக்கள ஆலோசனையின் படி எதிர்காலத்தில் மீள் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மேற்படி |
| (ஆ) | 2011 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி | 15 செயற்குழுக்களினாலும் விவசாய ரீதியிலான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி திட்டம் என்பன | மீளாய்வாண்டின் போது கைவிடப் பட்ட போதும் 2025 ஆம் ஆண்டிற்கு | மேற்படி |

| | | | | |
|---|---|---|---|---|
| | (திருத்தப்பட்ட) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டத்தின் 52 ஆம் பிரிவு | தயாரிக் கப்பட்டிருக்கவில்லை. | தயாரிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 137 | 03 குழுக்களால் அங்கீகாரமின்றி 67 கொடுப்பனவு உறுச்சீட்டுக்களின் மூலம் ரூபா 3,892,858 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. (இணைப்பு 12) | உறுச்சீட்டுக்களை அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் இணங்காமல் செயற்பட்ட தரப்பினருக்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 225 | பனாவெல குழுவினால் சிட்டைகள் இன்றி ரூபா 59,564 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மேற்படி |
| (iii) | நிதிப்பிரமாணம் 257 | 02 குழுக்களில் ரூபா 3,269,363 பெறுமதியான 66 உறுதிச்சீட்டுக்கள் உறுதிப்படுத்தப்படாமல் செலுத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வுடன் இணங்குவதுடன் எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மேற்படி |
| (ஈ) | 2012 பெப்ரவரி 29 ஆம் திகதிய இலக்கம் 04/2012 என்ற கமநல வங்கி சுற்றறிக்கை | | | |
| (i) | 3.1 ஆம் பந்தி | 02 குழுக்களின் அதிகாரப் பிரதேசத்தில் விவசாய உபகரணங்களை அடிப்படையாகக் கொண்ட செயற்திட்டத்தை | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் அவ்வாறு செயற்படாத |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அமுல்படுத்துவற்கு எதிர்பார்த்த விவசாயிகளை இனங்கண்டு அந்த செயற்திட்டத்தை ஊக்குவிப்பதற்கு வலுப்படுத்துவதற்கு அவர்களை ஊக்குவித்து விவசாய உபகரணக் கடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | தரப்பினருக்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 3.8 ஆம் பந்தி | 03 குழுக்களின் பங்குகள் மற்றும் சிறிய குழுக்களின் கணக்குகள் திறக்கப்பட்ட தினம் திகதி மற்றும் திறக்கப்பட்டு 08 நாட்களில் 372 நாட்களுக்கும் இடையில் 52 கடனாளிகளுக்கு ரூபா 3,050,000 பெறுமதியான செயற்திட்டக் கடன் விநியோகிக்கப்பட்டிருந்த போதும் கடன் பெறுவவர்களினால் கணக்கு ஆரம்பித்தமை மற்றும் கணக்கு மீதியொனறு காணப்பட்டமை கடன் விண்ணப்பங்களை பரிந்துரை செய்தல் மற்றும் அங்கீகரிக்கும் போது கவனத்திற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் அவ்வாறில்லாமல் நடவடிக்கை எடுக்கப்படும். | மேற்படி |
| (iii) | 4.1 (V) ஆம் பிரிவு | மீளாய்வாண்டில் கடன் கட்டுப்பாட்டு குழு தலைவரின் அங்கீகாரமின்றி பெமினிவத்த கமநல சேவை குழுவில் ரூபா 60,805,208 பெறுமதியான 252 உறுதிச்சீட்டுக்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மேற்படி |
| (உ) | 2023 ஏப்ரல் 24 ஆந் திகதிய 07/12/07 ஆம் இலக்க சுற்றறிக்கை | 06 குழுக்களால் இடர்கடன் மேவுகைக் கணக்கில் சேகரிக்கப்பட்ட ரூபா 5.305,795 நிலையான வைப்பு கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியினை உச்ச அளவில் ஆக்கபூர்வமானதாக முகாமைத்துவம் செய்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டில் 15 கமநல சேவைக் குழுக்களில் கூட்டுமொத்தமாக ரூபா 14,610,477 மிகையும், 11 கமநல வங்கிகளில் கூட்டுமொத்தமாக ரூபா 16,784,761 மிகையும், அம்பேபுஸ்ஸ கமநல வங்கியில் ரூபா 58,446 பற்றாக்குறையும் காணப்பட்டது. 2023 ஆம் ஆண்டில் 14 கமநல சேவை குழுக்களில் கூட்டுமொத்தமாக ரூபா 12,671,292 மிகையும், 14 கமநல வங்கிகளில் கூட்டுமொத்தமாக ரூபா 27,412,849 மிகையும் காணப்பட்டது.

**2.1.1 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு**

(அ) மீளாய்வாண்டின் 15 கமநல சேவைக் குழுக்களில் மிகை முன்னைய ஆண்டின் மிகையுடன் ஒப்பிடும் போது 07 குழுக்களில் ரூபா 5,691,723 மிகையில் அதிகரிப்பும் மற்றும் 08 குழுக்களில் ரூபா 4,747,835 மிகையில் வீழ்ச்சியும் காணப்பட்டது.

(ஆ) கமநல சேவைக் குழுக்களின் ஆரம்ப பணிப்பொறுப்பாக உரம், விவசாய இரசாயனப் பொருட்கள், நாற்றுக்கள் மற்றும் கன்றுகள், விவசாய உபகரணங்களை உள்ளடக்கிய விவசாய ரீதியான பொருட்களை விற்பனை செய்யப்படுவதுடன் மீளாய்வாண்டிற்குரியதாக 15 கமநல சேவைக் குழுக்களிலும் மொத்த விற்பனை கூட்டுமொத்தமாக ரூபா 53,215,521 ஆகும். மொத்த இலாபத்தின் கூட்டுமொத்தம் ரூபா 8,131,170 ஆனமையால் அதன் பிரகாரம் கமநல சேவைக் குழுக்களின் வருடாந்த சராசரி விற்பனைப் பெறுமதி ரூபா 3,547,701 ஆக இருந்ததுடன் சராசரி மொத்த இலாபம் ரூபா 542,078 ஆகும்.

(இ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் திசம்பர் 31 இல் உள்ளவாறு 15 கமநல சேவைக் குழுக்களின் நிதிக் நிலைமைக் கூற்று தொடர்பாக தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா. | ரூபா. |
|---|---|---|---|
| <u>மொத்த சொத்துக்கள்</u> | | | |
| நடைமுறைச் சொத்துகள் | = | 93,272,254 | |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | = | 71,229,819 | 164,502,073 |
| | | ------------------- | |
| <u>மொத்தப் பொறுப்புக்கள்</u> | | | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | = | 67,708,927 | |
| நீண்டகாலக் கடன் பெறுமதி | = | 14,649,754 | 82,358,681 |
| | | ------------------ | ----------------- |
| திரண்ட நிதியத்தின் பெறுமதி (தேறிய சொத்துக்கள்) | = | | 246,860,754 |
| | | | ========== |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 நிதி முகாமைத்துவம்**

**(அ) செயலிழந்த வங்கிக் கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | 07 குழுக்களில் ரூபா 198,226 மீதியுடன் 05 வங்கிக் கணக்குகள் மற்றும் ரூபா 22,073 | தேவை ஏற்படாத கணக்குகளை | வங்கிக் கணக்குகளை செயற்பாடுள்ளதாக |

| | | | |
|---|---|---|---|
| | ஆன 03 சேமிப்புக் கணக்குகள் செயலிழந்து காணப்பட்டது. | மூடுவதற்கும் ஏனைய கணக்குகளை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | பேணிச்செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 10 குழுக்களின் நடைமுறைக் கணக்குகளில் 2024 ஆம் ஆண்டில் மாதாந்தம் ரூபா 20,350 - ரூபா 3,992,476 இற்கிடையிலும் மற்றும் குழுக்களின் 02 சேமிப்புக் கணக்குகளில் ரூபா 445,963 இற்கும் ரூபா 10,418,127 இற்கும் இடையிலான தொகை மற்றும் கமநல வங்கி சேமிப்பு கணக்குகள் மற்றும் 02 நடைமுறைக் கணக்குகளில் 2024 ஆம் ஆண்டில் மாதாந்தம் ரூபா 965,468 இற்கும் ரூபா 3,301,321 இற்கும் இடையிலான தொகை நிறுத்திவைக்கப்பட்டதுடன் அதனை ஆக்க பூர்வமான முதலீடுகளில் ஈடுபடுத்தியிருக்க வில்லை. | ஆக்கபூர்வமான முதலீடுகளில் ஈடுபடுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் மேலதிக பணம் ஆக்கபூர்வமாக முதலீடுகளில் ஈடுபடுத்துதல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 03 குழுக்களில் பதிவு செய்யப்பட்ட சித்தமு காந்தா கமநல அமைப்புக்கள் 299 இல் 162 அமைப்புக்கள் செயலிழந்து காணப்பட்டது. | திணைக்கள ஆலோசனையினைப் பெற்று நலிவடைந்த சங்கங்களைக் கலைப்பதற்கும் மகளிர் சங்கங்களை செயற்பாடுள்ள நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பிப்பதற்கும் விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு இலக்குகள் வழங்கி செயல் முன்னேற்றம் மதிப்பீடு செய்யப்படும். | பதிவு செய்த கமநல அமைப்புக்கள் மற்றும் ஏனைய சங்கங்களை செயற்பாடுள்ளதாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3. செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 15 நிலையங்களில் அமைந்துள்ள 13 ஏக்கர் 03 றூட் 33.21 பேர்ச் அளவான காணிகளின் உரித்தைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்பதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஆலோசனையின் படி சகல நிலையங்களின் காணிகளும் கையேற்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2024/2025 பெரும்பேகத்திற்குரிய கால எல்லையில் 2025 மார்ச் மாதத்தில் | உர மானியத் தொகை விவசாயிகளுக்கு | மானிய உரப் பணம் போகத்திற்குரியதாக |

| | | | |
|---|---|---|---|
| | முடிவடைய வேண்டியிருந்த போதிலும் 07 குழுக்களில் மொத்தமாக 9,389 விவசாயிகளுக்குரிய ரூபா 48,713,633 மானியத் தொகையில் 2025 பெப்ரவரி 15 இல் உள்ளவாறு ரூபா 11,411,874 செலுத்தப்படாதிருந்தமையால் விவசாயிகளுக்குத் தேவையான மானிய பணம் போகத்திற்குரிய கால எல்லையின் போது வழங்கப்பட்டிருக்கவில்லை. | வழங்குதல், தகவல் முகாமைத்துவப் பரிவு மற்றும் மாவட்ட அலுவலகத்தின் மேற் கொள்ளப்படுகின்றது. | வழங்க வேண்டியிருந்ததுடன் அவ்வாறு நடவடிக்கை எடுக்காத தரப்பினருக்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | விவசாய பிரச்சினைகளுக்காகத் தீர்வை வழங்குதல் நிலையத்தின் பிரதான பணியாக இருந்த போதும் கடந்த ஆண்டுகளுக்குரியதாக 05 நிலையங்களுக்கு கிடைக்கப்பெற்ற 715 விவசாய முறைப்பாடுகளில் 562 முறைப்பாடுகளுக்காக தீர்வு வழங்கப்பட்டிருந்ததுடன் 153 இற்காக தீர்வு வழங்கப்பட்டிருக்கவில்லை. | மாவட்ட அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட முறைப்பாடுகளுக்காக பரிசோதனை மேற் கொள்ளப்படுகின்றது. | விவசாயப் பிரச்சினை களுக்காக கால ரீதியில் தீர்வினை வழங்குதல் வேண்டும். |
| (ஈ) | 10 குழுக்களில் கமநல அபிவிருத்தி பிரதேசத்தில் மொத்த வயல் காணிகளின் அளவு 45,694 கூறுகளாக இருந்ததுடன் இந்தக் கூறுகள் யாவும் Geogovia முறைமையைப் பயன்படுத்தி அளவீடு செய்து பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும் டிஜிட்டல் வயல் காணி பெயர் பதிவேட்டில் 13,020 காணிக் கூறுகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | புதிதாக சமர்ப்பிக்கப்பட்ட வயல் காணிகளின் பெயர் பதிவேட்டில் விண்ணப்பங்கள் முறையான பிரகாரம் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட பின்னர் வரைபடம் பூர்த்தி செய்யப்படும். | கமநல சேவை அதிகாரப் பிரதேசங்களில் சகல வயல் காணிகளும் வரைபடம் இடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 13 கமநல சேவை நிலையங்களுக்குரிய அதிகாரப் பிரதேசங்களில் நெற்பயிர்ச் செய்கைக்காக ஈடுபடுத்தக்கூடிய வெற்றுக் காணிகளின் அளவு (A வகை) ஏக்கர் 1062.64 ஆக இருந்ததுடன் ஏனைய பயிர்ச் செய்கைகளுக்காக ஈடுபடுத்தப்படக்கூடிய (B வகை) அளவு 756.83 ஏக்கர் மற்றும் C தொகுதிக்குரிய தரிசு வயல் காணிகளின் அளவு 637.84 ஏக்கராக மீளாய்வாண்டின் இறுதி வரையில் இனங்காணப்பட்டிருந்த போதும் தரிசு வயல் காணிகளை விளைச்சலில் ஈடுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வயல் காணிகளைக் கண்டறிந்து தேவையான சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுப்பதுடன் அந்தந்த பிரதேசங்கள் காணப்படுகின்ற நடை முறை ரீதியிலான பிரச்சினையின் அடிப்படையில் வயல் காணிகள் வெற்றிடமாக உள்ளது. | வெற்றிடமாகக் காணப்படுகின்ற சகல விவசாய ரீதியிலான காணிகளையும் பயிர்ச் செய்கைகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 07 குழுக்களில் விற்பனை பணம் செலுத்தும் அடிப்படையில் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவி உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படு | அந்த உத்தியோகத்தர் களுக்கு வார கூட்டத்தின் போதும், கடிதங்களின் | விற்பனைப் பணம் செலுத்தும் அடிப்படையில் வழங் |

| | | | |
|---|---|---|---|
| | கின்ற பொருட்களுக்கு உரிய மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,537,541 பெற வேண்டியிருந்தது. | மூலமும் அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கப்படுகின்ற பொருட் களுக்காக உரிய காலத்தின் பணம் அறவிட வேண்டியிருந்ததுடன் அவ்வாறு செலுத்தாத உத்தியோகத்தர்களுக்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இராணுவத்தால் 1992 ஆம் ஆண்டு எடுத்துச் செல்லப்பட்ட கிரயம் ரூபா 978,173 ஆன டெக்டர் மற்றும் டேலர் மீளப் பெற்றுக் கொள்வதற்கு யட்டியாந்தோட்டை கமநல சேவைக்குழு இதுவரை நடவடிக்கை எடுத்தி ருக்கவில்லை. | இது தொடர்பான தகவல்களைக் கண்டறிய முடியாமையினால் கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கு முடியாதுள்ளது. | உரிய சொத்துக்களை மீளப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.5 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அரநாயக்க கமநல சேவைக் குழுவில் 2021 ஆம் ஆண்டில் ரூபா 130,000 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட இளைக் கூறுகளாக்கும் இயந்திரம் சேதனப் பசளை உற்பத்தி செய்யாமையின் அடிப்படையில் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் ஹத்கம்பல உரக் களஞ்சியம் மற்றும் நாரங்கம்மன விற்பனைச் சாலையிலும் விளைவற்றுக் காணப்பட்டது. | சேதனப் பசளை நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தாமை மற்றும் அது தொடர்பாக விவசாயிகள் ஆர்வம் குறைவடைந்தமை கூறிடல் இயந்திரம் பயன்படுத்ததல் குறை வடைவதற்கு காரணமாக இருந்தது. | சொத்துக்களை முழுமையாகப் பயன்படுத்துவதற்கான வேலைத்திட்டம் ஒன்று பயன்படுத்தப் படல் வேண்டும். |
| (ஆ) | 02 குழுக்கள் 2014 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்த போலியான பண நோட்டுகளை இனங்காணும் இயந்திரம் விளைவற்றுக் காணப்பட்டது. | இதுவரை அந்த இயந்திரம் பயன்படுத்தப் படாதிருந்ததுடன் எதிர் காலத்தில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மேற்படி |
| (இ) | 10 செயற்குழுக்களில் 2024 ஆம் ஆண்டின் நவம்பர் மாதம் ரூபா 1,261,300 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட pass book printer இயந்திரம் பயன்பாட்டிற்கு பயன்படுத்துவற்கு தேவையான பாஸ் புத்தக கமநல வங்கிக்கு கிடைக்காமை மற்றும் வங்கி மென்பொருள் முறைமை ஸ்தாபிக்காமையின் காரணமாக விளைவற்றுக் காணப்பட்டது. | மென்பொருள் முறைமையை ஸ்தாபித்த பின்னர் இந்த இயந்திரம் பயன்படுத்தப்படும். | கூடிய விரைவில் இந்த இயந்திரத்தைப் பயன்படுத்தும் வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

### 3.6 செயற்திட்டம் அல்லது மூலதன வேலைகளின் தாமதம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 07 குழுக்களில் மீளாய்வாண்டின் போது அத் தியவசியமாக மீள் கட்டமைக்கப்பட வேண்டிய 381 சிறிய சீர்ப்பாசனங்களை உள்ளடக்கி முன்னுரிமைப் பதிவேடொன்று சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் அதில் 336 அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | முன்னுரிமையின் பிரகாரம் வருடாந்தம் நிதி ஏற்பாடு ஒதுக்கப் பட்டு மறுசீரமைத்தல் மாத்திரம் மேற்கொள்ளப் பட்டுள்ளது. | மறுசீரமைப்பு முன்மொழிவை அமுல்படுத்தி வெற்றுக் காணிகளில் பயிர்ச் செய்வதற்கு விவசாயிகளைத் தொடர்புபடுத்துவதற்கான வேலைத் திட்டம் ஈடுபடுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | 13 கமநல சேவைக் குழுக்குரிய அதிகார பிரதேசத்தில் 25 குளங்கள், 1,275 அணைக்கட்டுக்கள், 557 விவசாய வீதிகள் மற்றும் 521 விவசாய வாய்க்கால்களை உள்ளடக்கியிருந்த போதும் அதில் 312 அணைகளும், 17 விவசாய வீதிகளும் மற்றும் 08 வாய்க்கால்களும் செயலிழந்த நிலையில் காணப்பட்டது. | வருடாந்தம் விவசாய அபிவிருத்தியின் மூலம் முன்னுரிமைப் பதிவேட்டைக் கோரி தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | செயலிழந்த குளங்கள், அணைகள், விவசாய வாய்க்கல் மற்றும் விவசாய வீதிகள் யாவையும் செயற்படு நிலைக்கு கொண்டு வருவதற்கான வேலைத்திட்டமொன்று ஈடுபடுத்தப்படல் வேண்டும். |

### 3.7 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு 15 குழு அதிகாரப் பிரதேசத்தில் 05 பிரதேச உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் பதவிகள் 175 பிரிவுகளிலும் வெற்றிடமாக காணப்பட்டது. | வெற்றிடமான குழுக்கள் மற்றும் பிரிவுகளுக்கான பதிற்கடமைக்கான உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன் அரசாங்கத்தின் மூலம் இதுவரை நியமனம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பதவியணியினரை மீளாய்வு செய்து அத்தியவசிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்று ஈடுபடுத்தப்படல் வேண்டும். |

## 04. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்குரிய 15 கமநல சேவைக் குழுக்களிலும் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் வருட இறுதியில் செயல் முன்னேற்றம் | பதிலளிக்கப்படவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி செயல் முன்னேற்றத்தை சமர்ப்பிப்பதற்கு |

| | | |
|---|---|---|
| தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2024 இன் பாதீட்டு மதிப்பீடு மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களை ஒப்பீடு செய்யும் வருமான மற்றும் செலவினங்களில் 420 தலைப்புக்களில் 10 சதவீதம் முதல் 3369 சதவீதத்திற் கிடையிலான முரண்களான வீச்சல் காணப்பட்ட தன் காரணமாக கட்டுப்பாட்டு முறைமையாக ஈடுபடுத்தப்பட வேண்டிய பாதீடு குழுவினால் ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு உபாய வழியாக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | பாதீடு கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படல் வேண்டும். |

**4.3. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 11 கமநல சேவைக் குழுக்களின் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 4,305,512 ஆன 809,752 மிளகாய்க் கன்றுகளில் ரூபா 2,806,987 ஆன 472,753 கன்றுகள் அழிவடைந்திருந்ததுடன் பெமினிவத்த குழுவில் 385 விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட ரூபா 1,262,800 பெறுமதியான 1540 பயற்றை விதை பக்கட்டுக்களில் 50 மெற்றிக்தொன் விளைச்சல் எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் 24 மெற்றிக்தொன் விளைச்சல் மாத்திரம் கிடைத்தமையால் இந்த நிகழ்ச்சித்திட்டம் தோல்வியடைந்த செயற்திட்டத்திற்கு உட்பட்டிருந்தது. | அதிக சீரற்ற காலநிலை இதற்கு காரணமாக இருந்தது. | திட்டங்களை தயாரிக்கும் போது காலநிலை மற்றும் கால நிலைமையினைக் கவனத்திற்கொண்டு செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பரகம்மன குழுவில் எதிர்பார்க்கப்பட்ட பாதுகாப்பட்ட வீடுகளை நிர்மாணிப்பதற்காகவும் ஒரு கொட்டகைக்காக அரசாங்கத்தின் பங்களிப்பாக ரூபா 500,000 வீதம் பரகம்மன கமநல சேவை நிலையத்தில் 22 நலனாளிகள் தெரிவு செய்யப்பட்டு ரூபா 21,890,000 செலுத்தப்பட்டி ருந்த போதிலும் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2023 ஒக்டோர் 06 ஆந் திகதிய இலக்கம் 7/3/19/S.A.V/2023 வழிகாட்டியின் இணைப்பு 01 இன் கீழ் ஆன புரிந்துணர்வு உடன்படிக்கையின் 06(1) பந்தியின் பிரகாரம் செயற்திட்டம் அமுல்படுத்தப்படுகின்ற காணியின் சட்ட ரீதியான | நிகழச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான வழிகாட்டியின் பிரகாரம் நலனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். | செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக தேவையான அடிப்படைக் குறிகாட்டிகளான காணியின் சட்ட ரீதியான உரித்து ஏற்றுக் கொள்ளக்கூடிய சட்ட ரீதியான ஆவணங்களின் மூலம் உறுதிப்படுத்துதல் |

| | | | |
|---|---|---|---|
| | உரித்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை. | | வேண்டும். |
| (இ) | பரகம்மன குழுவில் எக்கிரியகல விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட பசுமைக்கூடத்தின் நிர்மாணம் பூர்த்திசெய்யப்பட்டு ரூபா 995,000 செலுத்தப்பட்டிருந்த போதும் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்ப டாதிருந்தமையால் செலவினத்தின் செயற்திறனான தன்மை மற்றும் வினைத்திறனான தன்மை என்பன பூச்சிய மட்டத்தில் காணப்பட்டதுடன் 2023 ஒக்டோபர் 31 ஆந் திகதிய புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி இந்த பசுமைக்கூடம் கேகாலை மாவட்டத்தின் கமநல அபிவிருத்தி அதிகார பிரதேசத்திற்கு உரித்தல்லாத கண்டி, அஸ்கிரிய பிரதேசங்களில் குடியிருப்பவர்களுக்கு வழங்கப்பட்டமை மற்றும் உடன்படிக்கை செய்வதற்கான காரணம் கணக்காய்வில் தெளிவுபடுத்தப்பட வில்லை. | அவசரமாக வெளி நாடு சென்றதன் காரணமாக அவர்களின் தந்தைக்கு பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் கையளிக்கப்பட்டது. | புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி நடவடிக்கைகள் எடுக்க வேண்டி இருந்ததுடன் மாவட்டத்திலிருந்து வெளியிலுள்ள நபருக்கு வழங்குவதற்கு உரிய முறையான பரிசோதனை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஈ) | பரகம்மன குழுவின் நலனாளிகளின் பெயர் பதிவேட்டில் 04 நபர்களின் பெயர் குறிப்பிட்டு இரண்டு நபர்களுக்கு ரூபா 1,990,000 பெறுமதியான 02 பசுமைக்கூடங்கள் வீதம் வழங்கப்பட்டமையால் பாரம்பரிய பயிர்ச் செய்கையாளர்கள் விவசாய தொழில் முயற்சிகளுக்கு ஈடுபடுத்தும் நோக்கம் தவறவிடப்பட்டிருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட விவசாயிகள் எண்ணிக்கை ஒன்றுக்கு விருப்பம் தெரிவிக்காமையின் காரணமாக கோரியிருந்த விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்தது. | முறையான பரிசோதனை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | நவீன தொழில்நுட்ப திட்டமுறைமையின் பிரகாரம் தானியங்கி நீர் விசுறும் முறைமை மூலம் நீரை ஈடுபடுத்துவதற்கு பரகம்மன குழுவினால் 22 விவசாயிகளுக்கு வசதிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் 22 நலனாளிகளுக்கிடையே மூன்று பேர் மாத்திரம் மேற்கூறப்பட்ட முறைமையின் மூலம் நீரை ஈடுபடுத்தி இருந்மையால் செயற் திட்டத்தின் நோக்கமான நவீன தொழில்நுட்பத்தை ஈடுபடுத்தல் சகல நலனாளிகளினாலும் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. | அநேகமான விவசாயிகள் வீட்டுக்கு அருகில் குடியிருக்கின்றமை யினால் இந்த உபகரணங்கள் பயன்படுத்தப்படாதிருந் தது. | நவீன தொழல் நுட்பத்தை உடைய நீர் விசிறும் முறைமையைப் பயன்படுத்துவதற்கா க தொழில் முயற்சியாளர்களை ஈடுபடுத்துவதற்கு உரிய உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**5. கமநல வங்கிகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 11 கமநல வங்களின் சேமிப்புக் கணககுகளில் ரூபா 31,697,175 இற்கும் ரூபா 79,366,712 இற்கும் இடையிலான மீதியும், நடைமுறைக் | எதிர்காலத்தில் சரிசெய்யப்படும். | முறைமையான அங்கீகாரத்தின் கீழ் ஆக்கபூர்வமான |

| | | | |
|---|---|---|---|
| | கணக்குகளில் ரூபா 2,037,925 இற்கும் ரூபா 21,533,667 இற்கும் இடையிலான மீதி காணப்பட்ட போதும் மிகைப் பணத்தை ஆக்கபூர்வமான முதலீடு களில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | முதலீடுகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அரநாயக்க கமநல வங்கியின் குழுத் தீர்மானத்தின் அடிப்படையில் ஒப்பந்தங்களில் 1 சதவீதம் கமநல அபிவிருத்தி நலன்புரி நடவடிக்கைகளுக்காக அபிவிருத்தி நிதியம் என்ற பெயரில் கணக்கில் செலவுவைத்து அந்தத் தொகையில் 2024 ஆம் ஆண்டில் ரூபா 493,987 செலவிடப்பட்ட போதும் உறுதிச்சீட்டுக்களில் பயன்படுத்தப்பட்ட பயன்பாட்டு ஆவணங்கள் இணைக்கப்ப டாதிருந்ததுடன் அந்த கணக்கில் ரூபா 958,333 வருட இறுதி மீதி கணக்குகளில் வெளிப்படுத்தப்படாமல் நாட்குறிப்புக்களின் மூலம் பங்கு வைப்பு கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. | விவசாய சங்க முகவர்க ளினால் இந்தக் கணக்கின் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள் ளப்பட்டமைப்யும் 1 சதவீதம் தவறொன்றினால் செலவு வைக்கப்பட்டதுடன் அது நாட்குறிப்புக்களின் மூலம் சரிசெய்யப்பட்டுள்ளது. | வருட இறுதியில் மீதியை சரியாகக் கணக்குகள் வெளிப்படுத்த வேண்டியிருந்ததுடன் உரிய சரிசெய்தல்கள் மேற் கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | 11 கமநல வங்கிகளின் கடன்கள் உரிய நேரத்தில் அறவிடும் கடன் அறவிடல் செயற்பாடுகளுக்கு உதவி காண்பித்து கால ரீதியான நிலுவைக் கடனை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுத்தல் மற்றும் பதவியணியினரை ஈடுபடுத்துதல் மற்றும் தேவையான வழிமுறைகளை எடுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தர்களின் பொறுப்புக்கள் உரிய பிரகாரம் நிறைவேற்றாமையின் காரணமாக காலாவதியான நிலுவைக் கடன் ரூபா 127,575,674 மற்றும் காலம் கடந்த நிலுவைக் கடன் ரூபா 32,374,002 காணப்பட்டது. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வங்கிக் கடன் கால ரீதியில் அறவட வேண்டியிருந்ததுடன் காலரீதியில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்களு க்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |